Kalpakkam Atomic Power Plant.

* 97 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state the amount invested by our Government in Kalpakkam Atomic Power Plant?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் இந்த அரசு எவ்வித முதலீடும் செய்யவில்லை. அது முழுவதும் மத்திய அரசுக்குச் சொந்தமானது. ஆயினும் இந்த அரசு சுமார் 53 இலட்சம் பெருமானமுள்ள 2,500 ஏக்கர் நிலங்களை இலவசமாகக் கல்பாக்க மின் நிலையத்திற்கு வழங்கியிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, கல்பாக்கம் அணு மின் நிலையத்தில் நமது தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை சதவிகிதம் பேர் பணிபுரிகிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, எத்தனை சதவிதம் என்பதற்கு என்னிடம் குறிப்பு இல்லை.

* 98 வினா.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்பாக்கம் அணு மின் நிலைய வேலைகள் எப்போது பூர்த்தி அடையும்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : கல்பாக்கம் அணு மின் சக்தி நிலையத்தின் முதல் பிரிவின் வேலைகள் 1975 நவம்பர் மாதத்தில் முடிவு பெற்று, செயற்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இரண்டாவது பிரிவு 1976-ம் ஆண்டு தயாராகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு சு. துரைசாமி : தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்தில் மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. பற்றாக்குறையைப் போக்குவதற்கு இந்த வேலைத் திட்டத்தைத் துரிதப்படுத்த வேண்டியது மட்டுமல்லாமல் 1975-ம் ஆண்டு இறுதியில் இன்னும் அதிகமாக நமக்கு மின்சாரம் தேவைப்படும். எனவே, இதில் விரைவான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, விரைவுபடுத்த வேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதி இருக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு பம்பாய் மாநிலத்திலிருந்து எத்தனை நிபுணர்கள் வந்து வேலை செய்கிறார்கள்? அது சம்பந்தமாக ஏதாவது விபரங்கள் இருந்தால் அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

1972 டிசம்பர் 8]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடம் இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, கல்பாக்கம் அணு மின் திட்டம் 1972-லேயே முடிந்திருக்க வேண்டும், ஒரிஜினல் பிளான்படி. ஆனால் மத்திய அரசாங்கம் எந்தக் காரணத்தினாலோ இதில் போதிய அக்கறை காட்டாமல் இருந்துவிட்டது. அதன் மூலம் தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய பலன்கள் கிடைக்காமல் போய்விட்டன. நம்முடைய மாநில அரசு ஆண்டு ஒன்றுக்கு 53 லட்சம் ரூபாய் வருமானம் வரக்கூடிய நிலத்தைக் கொடுத்தும், இன்னும் காலதாமதம் ஆவதால் நமக்கு அதனாலும் நஷ்டம். ஆகவே, இந்தத் திட்டத்திலே விரைவான நடவடிக்கை எடுக்கவும், ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டதைக் காட்டிலும், நமது மின்சாரத் தேவையைப் பொறுத்து, இரண்டு மடங்காக்குவதற்கும் மத்திய அரசாங்கத்தை நமது அரசாங்கம் வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, இப்போது இருக்கின்ற நிலைமைகளை உத்தேசித்து, இதிலே துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். கல்பாக்கம் அணு மின் நிலையத்தில் முதல் கட்டமாக 235 மெகவாட் மின் உற்பத்திக்கும், இரண்டாம் கட்டத்தில் மேலும் 235 மெகவாட் மின் உற்பத்திக்கும் திட்டமிடப்பட்டுள்ளது. முதல் கட்ட வேலை முடிவுறும் நிலையில் உள்ளது. இரண்டாம் கட்ட வேலைக்கு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். நடைமுறை சாத்தியக் கூறுகளை ஒட்டி துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, மத்திய அரசாங்கத்தினுடைய இறக்குமதிக் கொள்கையில் கடைப்பிடிக்கப்படும் கட்டுப்பாட்டின் காரணமாகத் தான் இப்படிப்பட்ட வேலைகள் நடைபெறுவதில் காலதாமதம் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. அது உண்மையா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, அது ஓரளவு உண்மை தான். இப்போது மத்திய அரசு அதுபற்றி பரிசிலனை செய்து வருகிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இத் திட்டத்தில் மத்திய அரசாங்கம் பாரபட்சமாக நடந்து கொள்ளவில்லை என்பதைக் காட்ட, இதற்குப் பின்னால் பிற மாநிலங்களில் தொடங்கப்பட்ட அணு மின் நிலையத் திட்டங்கள் பற்றிய விபரங்கள் எந்த நிலையில் உள்ளன என்பதை பற்றிய குறிப்பினை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ? இத் திட்டத்தை நிறைவேற்றுவதில் மூலப்பொருள் கிடைப்பதில் உள்ள இடர்ப்பாடு ஒரு காரணம் என்று சொல்லப் படுவது உண்மையா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, இம்மாதிரித் திட்டங்களுக்கு அன்னிய செலாவணி பெரிதும் தேவைப்படுகிறது. முதல் கட்ட வேலைக்கு 15 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இரண்டாம் கட்ட வேலைக்கு 15.36 கோடி ரூபாய் அனுமதித்திருக்கிறார்கள். மேலும் சில சிக்கல்கள் இருக்கின்றன. அதனால் தான் 1974-ல் முடிய வேண்டிய வேலை 1975-ல் முடிகின்ற நிலையில் இருக்கிறது. இன்னும் துரிதப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, நமது மாநிலத்திற்கே மின்சாரப் பற்றுக்குறை இருக்கும்போது கல்பாக்கம் அணு மின் நிலையத்தில் மற்ற மாநிலங்களும் உரிமைக் கொண்டாடுகின்றனவே, அவர்கள் எந்த அடிப்படையில் இத் திட்டத்தில் உரிமை கொண்டாடுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, முதல் பிரிவில் தயாராகும் மின்சாரத்தை தமிழகம் பயன்படுத்திக்கொள்ளும். இரண்டாவது பிரிவில் உற்பத்தியாகும் மின்சாரத்தை ஆந்திர அரசாங்கம் வேண்டுமென்று கேட்கிறது. தமிழகத்திற்கு தேவையானது போக, உபரி இருந்தால் கொடுப்பதாக நாம் தெரிவித்திருக்கிறோம்.

ஜீப் பேருந்துகள்

* 99 வினா.—**திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமச் சாலைகளில் ஜீப் பஸ்கள் ஓட அனுமதி வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தற்போது அத்தகைய செயற்குறிப்புகள் எதுவும் அரசிடம் முடிவுறு நிலையில் இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தற்போது கிராமப்புறச் சாலைகளில் எத்தனை ஜீப் பஸ்கள் ஓடுகின்றன என்பதையும் இன்னும் எத்தனை ஜீப் பஸ்கள் விடப்பட இருக்கின்றன என்பதையும் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஏற்கெனவே 12 வழித் தடங்களில் 14 ஜீப் பஸ்கள் ஓடுகின்றன. அது மட்டுமல்ல. மேலும் 16 வழித்தடங்களில் ஜீப் பேருந்துகள் விடும் செயற்குறிப்புகள் தொடர்புடைய வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளிடம் முடிவு பெறுமல் உள்ளன.